


திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சிங்கில்பாடி மற்றும் திருமங்கலம் ஊராட்சியில் வாக்குச்சாவடி முகவர்கள் கள ஆய்வுக் கூட்டம் முனிகிருஷ்ணன், கங்காதரன், வினோபாஸ், மணிகண்டன் ஏற்பாட்டில் ஒன்றிய குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, தேர்தல் பணிகள் குறித்தும், வரும் தேர்தலில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், கிளைச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். இந்நிகழ்வில் சிவபாதம், பால்ராஜ், பொடவூர் ரவி, சந்தவேலூர் நா.சத்தியா, கலை மோகன், நாசர், நரேஷ், ஆண்டனி, வினோத்குமார், முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் தியாகராயநகர் 141 மற்றும் 141அ வட்டத்தை சேர்ந்த 2026 திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன்.எம்.சி. தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பொங்கல் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி, ஜெ.ஜானகிராமன், கோ. உதயசூரியன், என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன், பி.மாரி, எஸ்.ராமலிங்கம், இரா.கருணாகரன் மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

### திரு.வி.க. நகர் வார்டு 74–ல் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில்

# நவீன உடற்பயிற்சிக் கூடம்! ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் புதிய பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜன.9-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (08.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74, பெரம்பூர், ஏகாங்கிபுரம் 1வது தெருவில் மேயர் அவர்களின் 74ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய நவீன உடற்பயிற்சிக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த உடற்பயிற்சிக் கூடமானது, 1,325 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், சைக்கிள், டிரெட்மில் உள்ளிட்ட நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடன் ஆகிய உபகரணங்களுடன் இந்தக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து, பெரம்பூர், குளக்கரை சாலையில் மூலதன நிதியில் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் 7,542 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்படவுள்ள புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திற்கான பணியினையும், சோமசுந்தரம் நகரில் உள்ள திறந்தவெளி நிலத்தில் மாநகராட்சியின் சார்பில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் 14,558 சதுர அடி பரப்பளவில் புதிய பூங்கா அமைக்கும் பணியினையும் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள், தியான மேடை, நடைபாதை, இறகுப்பந்து மற்றும் மட்டைப் பந்து பயிற்சிக் கூடம், சிறுவர் விளையாட்டுத் திடல், நூலகம், கழிப்பிடம் ஆகியவை அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச். ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் – 2016–ன் கீழ்

# அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 8-வது கூட்டம்!

## புதுடெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

*சென்னை, ஜன.9*

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காகவும். அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், ஒன்றிய அரசிற்கு உரிய ஆலோசனை வழங்கவும், மத்திய ஆலோசனை வாரியம் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மத்திய ஆலோசனை வாரியத்தின் 8-ஆவது குழுக் கூட்டம் புதுடெல்லி டாக்டர். அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று (08.01.2025) ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர். வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் பி.எல். வர்மா, மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தல் துறையின் ஒன்றிய அரசு செயலாளர் செல்வி. வி.வித்யாவதி ஒன்றிய அரசின் இணை செயலாளர்கள், இயக்குனர்கள் மற்றும் பிற மாநில அரசுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை நிர்வகிக்கும் முதலமைச்சர் அவர்களின் சார்பாக, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் அவர்களுடன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஆணையர்/அரசு சிறப்பு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை திருமதி.எம்.லஷ்மி. கலந்து கொண்டனர்.

அமைச்சர் மருத்துவர். மா.மதிவேந்தன் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் பல முன்னோடி திட்டங்களை எடுத்துரைத்து சில முக்கிய கோரிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளையும் ஒன்றிய அரசின் பரிசீலனைக்காக முன்வைத்தார்.

ஒன்றிய அரசு நிர்வகித்து வரும் தனித்துவ அடையாள அட்டை (UDID) தரவுத்தளத்தில் தமிழ்நாடு அரசிற்கு இணைய இசைவு வழங்கிட அமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிற்கு இணைய இசைவு வழங்கியதற்கு அமைச்சர் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இயக்கக் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனங்கள் வாங்கும் போது வழங்கப்பட்டு வந்த GST வரிவிலக்கை தொடர்ந்திடவும், கேட்கும் கருவிகளுக்கு வழங்கப்படும் GST விலக்கு போன்று, அனைத்து உதவி உபகரணங்களுக்கும் GST விலக்கு வழங்க வேண்டியும், மாற்றுத்திறனாளிகளை பணிக்கு அமர்த்தும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல்வேறு சலுகைகளை மீண்டும் நடைமுறைப்படுத்திடவும் அமைச்சர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலும், மாநில UDID ஒருங்கிணைப்பாளர் ஊதிய நிலுவைத் தொகையான 9 இலட்சத்தினை விரைவில் விடுவித்திடவும், தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தால் (NDFDC) ஒதுக்கப்பட்ட 50 கோடி கடன் உதவி நிதியை தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு விரைவில் விடுவித்திடவும். ஒன்றிய அரசின் Accessible India Campaign திட்டத்தின் தமிழ்நாட்டிற்கான இறுதி தவணைத் தொகையான 13.81 கோடி ரூபாயினை விரைவில் விடுவித்திடவும், மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணையர் அலுவலகத்தை வலுப்படுத்த 2.21 கோடி நிதி ஒதிக்கிடவும் அமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கீடு தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், உதவி உபகரணங்களுக்கான ஒன்றிய அரசின் ARJUN இணையதளத்தை பயன்படுத்த தமிழ்நாடு அரசிற்கு இசைவு வழங்கிடவும், ஒன்றிய அரசின் UDID தரவுத்தளத்தில் தமிழ்நாட்டினை சேர்ந்த 45000ற்கும் மேற்பட்ட இறந்தோரின் தரவுகளை கள ஆய்வுகளின் அடிப்படையில் நீக்குவதற்கான வசதியினை ஏற்படுத்திடவும், தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் (NSP) மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில்லா மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதை முறைப்படுத்திடவும் அமைச்சர் அவர்களால் கோரப்பட்டது.

இறுதியாக. Rehabilitation Council of India Act, 1992 சட்டத்தின் கீழ் புகாரளிக்க மாற்றுத்திறனாளிகள் நல ஆணைய அதிகாரியினை தமிழ்நாட்டிற்கான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக நியமித்திட கோரியும் தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் ஒன்றிய அமைச்சர் அவர்களிடமும் ஒன்றிய அரசின் செயலாளர் அவர்களிடமும் கடிதங்களை வழங்கினார்.

### கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர்களுக்கு பொன்னான வாய்ப்பு!

# மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

*சென்னை, ஜன. 9-*

“கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது” என்று மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான முனைவர். அ. ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மீனவர்கள் நலன் சார்ந்து ஏராளமான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது தொடங்கி மீனவர்கள் நலன்நாடும் பல திட்டங்கள் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் தமிழக மீனவர்களுக்கு கூடுதல் பலன்களைக் கொடுக்கும் வகையில் அவர்களை மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இதற்கான சிறப்பு முகாம்கள் 8 ஆம் தேதி தொடங்கி, வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது. முதல் நிகழ்வாக குமரி மாவட்டத்தில் வரும் 8 ஆம் தேதி இந்த முகாம் தொடங்குகிறது. ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் முகாம்கள் குறித்து மீன்வளத்துறை அலுவலகம் மூலம் சுற்றறிக்கையாக அனுப்பி விழிப்பூணர்வூட்டப்பட்டு வருகிறது.

**யாரெல்லாம் சேரலாம்?**

18 வயது முதல் 65 வரையுள்ள மீன் தொழிலாளர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேரலாம். இதுவரை உறுப்பினராக இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதன் மூலம் பயனாளிகளை விரிவுபடுத்துவதுடன், கழகத் தலைவர் மீனவ சமூகத்திற்கு வழங்கியிருக்கும் திட்டங்களையும் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் முதன்மை நோக்கம்.

**தேவையான ஆவணங்கள்**

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு வயது மற்றும் இருப்பிடத்தைக் காட்டும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களான குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட இதர முக்கிய ஆவணங்களின் நகல், வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றோடு, உறுப்பினராக சேர வரும் மீனவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தையும் கொண்டு வரவேண்டும்.

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளர்களுக்கு ஏராள மான நிவாரணங்களும், உதவித் தொகையும் பெறமுடியும். உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளி விபத்தினால் மரணம் அடைந்தால் 2 லட்சம் ரூபாயும், இரண்டு கைகளையோ, அல்லது இரு கால்களையோ இழந்திருந்தால் ஒரு லட்சம், ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் ஒரு லட்சம் என நிவாரணத் தொகை வழங்கப்படும்.

இதேபோல், இருகண்களிலும் பார்வை இழப்பு ஏற்படும்பட்சத்தில் ஒரு லட்சம் ரூபாயும், உடல் உறுப்புகளில் ஏதேனும் விபத்தில் இழப்பு ஏற்பட்டால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கும் 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். இயற்கை சீற்றத்தினாலோ, பேரிடரினாலோ கடலில் மீனவர்கள் காணாமல் போனாலும் நலவாரிய உறுப்பினராக இருக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர் இயற்கை மரணம் அடைந்தால் 25000 ரூபாயும், அவரது ஈமச் சடங்கு செலவிற்கென 2500 ரூபாயும் வழங்கப்படும்.

**கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்!**

நலவாரியத்தில் உறுப்பினராக இருப்பவரின் மகன், மகளுக்கு ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகையும் கிடைக்கும். நலவாரிய உறுப்பினரின் மகன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1250 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1750 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் உறுப்பினரின் மகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

உறுப்பினரின் மகன் ஐடிஐ, பாலிடெக்னிக் போன்ற தொல்நுட்பக் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 1950 ரூபாயும், கலைக் கல்லூரிகளில் இளங்கலை படித்தால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். முதுகலை படிப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 3750 ரூபாய் வழங்கப்படும். சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற இளங்கலை தொழிற்படிப்புகளுக்கு அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 4750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் முதுகலை தொழில் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 6750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

நலவாரிய உறுப்பினர்களின் மகனின் திரு மணத்திற்கு 3000 ரூபாயும், மகளின் திருமணத்திற்கு 5000 ரூபாயும் வழங்கப்படும். இதேபோல் மகப்பேறு காலத்திலும் 6000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தின் 14 மாவட்டங்களிலும் இருக்கும் மீனவ மக்கள் இந்த நல்லவாய்ப்பினை பயன்படுத்தி, மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்ந்து பலன் அடைய வேண்டும். மேலும், மீனவ மக்களின் நலனிற்காக மீனவர் நலவாரியத்திற்கு தலைவரை நியமித்து, மீனவ மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் முகாம் நடத்தி, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த ஆவணச் செய்த கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த பொங்கல் தொகுப்பு ரூ.3000/ மற்றும் பச்சரிசி, சர்க்கரை, வேஷ்டி, சேலை, கரும்புடன், 38வது வட்டத்தில் உள்ள நியாய விலைக் கடையில் பொது மக்களுக்கு வட்ட செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான நேதாஜி யு.கணேசன் வழங்கினார்.உடன் எம்.பி.பாலு, எஸ்.கமருதீன்,கமுதி, சாகுல், ஜான்கென்னடி, கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### புகையில்லா போகிப் பண்டிகையை கொண்டாடுவோம்!

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவிப்பு!

## பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள்!

*சென்னை, ஜன. 9-*

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழைய கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப்பண்டிகையினைக் கொண்டாடி வந்துள்ளனர். இயற்கைப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டுக் கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் காற்று மாசுபடாமல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகிப் பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 21 ஆண்டுகளாக போகிப்பண்டிகைக்கு முன் பொதுமக்களிடைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது.

மேலும், போகிப்பண்டிகையின் போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, வாரியம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் மற்றும் போகிப்பண்டிகை நாளிலும், 15 இடங்களில் 24 மணிநேரமும் காற்றுத்தரத்தினை கண்காணிக்க, காற்று மாதிரி சேகரிப்பு செய்து ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது. மேலும் காற்றின் தர அளவு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படும்.

இந்த 2026 ஆம் ஆண்டும் சுற்றுச்சூழல் மாசு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாநகரம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இவ்வருடம் பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்டிக், டயர், ட்யூப் போன்றவற்றை எரிக்காமல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் போகிப்பண்டிகையைக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் 100வது வார்டில் , பொதுமக்களுக்கு வீட்டு உபயோக பொருட்கள் அடங்கிய தொகுப்பை வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் அண்ணா நகர் வடக்கு பகுதி செயலாளர் திரு. பரமசிவம் மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், வட்டக் கழக செயலாளர் ஏகாம்பரம் . ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட ஒவ்வொரு வார்டு வாரியாக ஒவ்வொரு நாளும் வழங்கப்படும்.